பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5.00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 14 செவ்வாய்க்கிழமை 27-03-2001 தொலைபேசி: 3378 ஒலி: 98

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1621)

## புலிகளின் தலைவர் பிரபாவைச் சந்தித்த
# வாய்ப்பை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்

### கனடிய தமிழ் ஒலிபரப்புக்கு எரிக்சோல் பேட்டி!

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை எங்கு நடைபெறுமென்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை- எனினும் நெதர்லாந்தில் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக நோர்வேயின் சமாதானத்தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு எரிக்சோல் அண்மையில் வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தஅவர் மேலும் தெரிவிக்கையில்:

சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு அரசையும் புலிகளையும் கொண்டு வருவதற்கான முயற்சியில் நாம் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம், இருதரப்பும் நேரடியாக பேச்சுவார்த்தை மேசையில் சந்திக்க இன்னமும் மூன்று வாரங்களாவது செல்லும். எனினும் அதற்கு முன்னர் அவர்களை சந்திக்கவைப்பதில் நாம் ஆர்வமாகவுள்ளோம்.

இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்தியா முட்டுக்கட்டை போட்டதாக வெளியான தகவல்கள் குறித்து அதிகம் கருத்துக்கூற விரும்பவில்லையென்று தெரி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 'சிற்றி ஒவ் றிங்கோ' வாரத்தில் நான்கு சேவை

(கொழும்பு)

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்குமிடையிலான சிற்றி ஒவ் றிங்கோ சப்பல் வாரத்தில் நான்கு தடவைகள் சேவையில் ஈடுபடவுள்ளது.

சுமார் 400 பேர் பயணம் செய்யக்கூடிய இக்கப்பல் முன்பு வ ரத்தில் இரு தடவைகள் மட்டுமே சேவையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## ★ பிரிட்டனின் பயங்கரவாத தடைச்சட்டம்
# புலிகளை தடை செய்யும் பிரேரணை
# பிரபுக்கள்சபையில்இன்று ஆராய்வு

### மக்கள் முன்னணிக்கு தடையில்லை

(லண்டன்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டனில் பயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் தடை செய்வதற்கான பிரேரணை இன்று பிரபுக்கள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

**எனினும் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவான ''மக்கள்முன்னணி'' இலங்கையில் தடைசெய்யப்படாமையால் அக் கட்சி பிரிட்டனில் இயங்கலாம்என பிரிட்டனின் இராஜ தந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் பிரித்தானியஅரசு தடைசெய்யும் பிரேரணை இன்றுபிரபுக்கள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது இவ்வாறு இருக்க விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவான ''விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி'' இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது தொடர்பாக இலங்கைத் தேர்தல் ஆணையாளரிடம் அறிக்கை பெற்று சமர்ப்பிக்குமாறு பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு கொழும்பில் உள்ள தனது தூதுவரிடம் கேட்டுள்ளது. இதனை அடுத்து தூதுவர் இதுதொடர்பாகத் தேர்தல் ஆணையாளரிடம் இருந்து, விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி இலங்கையில் தடைசெய்யப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாய் பகுதியில் இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு8.10 மணியளவில் சுமார்25வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் கைக் குண்டொன்றை வெடிக்கவைத்து இறந்துள்ளார்என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இளைஞனின் சடலம் கோப்பாய் பொலிசாரினால் யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம்பற்றி தெரிவிக்கப்பட டிருப்பதாவது கோப்பாய் இராசபாதையில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இரு இளைஞர்களைஅப்பகுதியில் காவல்கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மறித்தனர் அச்சமயம்இளைஞர்கள் இருவரும்வேறுபக்கத்தால் தப்பிச்செல்லமுற்பட்ட போது இராணுவத்தினர் அவர்களை பின்தொடர்ந்தனர்.

இதன்போது இளைஞர்களில் ஒருவர் கைக்குண்டை வெடிக்கவைத்துப் பலியானார். மற்றைய இளைஞ

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சிறைக் கைதிகள் மோதல் விசாரிக்க குழு வருகிறது!

யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிங்களராணுவகைதிகளுக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ்தடுத்து வைக்கப்பட்டிருந்ததமிழ்கைதிகளுக்குமிடையே இடம்பெற்ற கைகலப்பு மற்றும்தாக்கப்பட்டசம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவென, இன்று விசாரணைக் குழுவொன்று யாழ்ப்பாணம் வருகிறது.

தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் சிறைச்சாலை அத்தியட்சகர்சிவபாதசுந்தரம் உட்பட பத்துப்பேர் கொண்ட இவ் விசாரணைக் குழுவினர்இன்று விசேடவிமானத்தில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். [இ]

## ஆயிரக்கணக்கில் ஆட்களைதிரட்டி புலிகள் போருக்கு தயாராகின்றனர்!
### பாதுகாப்புஅதிகாரிகள்அரசிற்குஎச்சரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் தென்மராட்சிப் பகுதிகள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலை படையினர் முறியடித்தமையினாலும் பிரிட்டன் புலிகளை தடை செய்துள்ளதாலும் பாதுகாப்புப்பலமடைந்துள்ளதாக எண்ணி அரசு சோர்வடைந்து விடக்கூடாதென பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அரசை எச்சரித்துள்ளனர்:

விடுதலைப்புலிகள் ஆயிரக்கணக்கில் ஆட்களைத்திரட்டி அடுத்த கட்டப் போருக்கு தயாரான நிலையில் உள்ளனர்: அவர்கள் யாழ் பிரதான ஏ-9 வீதியில் கிளிநொச்சி முதல் பளை வரையில் சுமார் 40கிலோமீற்றர் விஸ்தீரணமுள்ள பகுதியை இன்றும் தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருக்கின்றார்கள்.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கை மூலம் 1996ம் ஆண்டு செப்ரெம்பர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.ரெலிக்கொம்
## கோபுர வேலைகள் பூர்த்தி நெருக்கடி நிலை தீராது

(யாழ்ப்பாணம்)

யாழ் ரெலிக்கொம் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் 180 மீற்றர் உயரமான கோபுர வேலைகள் யாவும் பூர்த்தியாகும் நிலையில் இருப்பதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த கோபுர வேலைகள் முடிவடைந்ததும், தொலைபேசி இணைப்புகளில் தற்போது இருந்து வரும் நெருக்கடி நிலை குறையமாட்டாது என்றும் புதிய இணைப்புகள் எதுவும் வழங்கப்படமுடியாதிருப்பதாகவும்அந்தவட்டாரங்கள்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் பேரணி

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு கடற்கரை கிராமங்களில்மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களைக் கண்டித்து புதுக்குடியிருப்பு, மல்லாவிப் பகுதிகளில் மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு கண்டன ஊர்வலங்களை நடத்தியுள்ளனர்.

## ஜனாதிபதி இன்று பிரான்ஸ் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதிசந்திரிக்காகுமாரதுங்கா மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்றுகாலை பிரான்ஸ் செல்லவுள்ளார்.

பிரான்ஸ்செல்லும் அவர் நாளைபிரான்ஸ் ஜனாதிபதியையும் நாளை மறுதினம் பிரான்ஸ் பிரதமர் மற்றும் அந்நாட்டுக் கல்விஅமைச்சர்,

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்
7ஆம் பக்க தொடர்ச்சி

கூவியழைத்தால் போ போ கொண்டு போ 'நீநஞ்சுபோட்டுக் கொண்டு வந்தாய்' என அதட்டிக் கலைத்து விட்டு எழுந்து எட்டி எட்டி நடந்து நெடுந்தூரம் சென்றுமீண்டும் வந்து குந்தியிருப்பார். தமக்கு விருப்பமுள்ளபோது ஏதாவது உண்டு பெரும் பகுதியை காகம், கோழி, நாய் உண்ணுமாறு வைத்து வேடிக்கைபார்ப்பார். ஒருமுறை செல்லப்பா சுவாமிகளிடம் அன்புகொண்டிருந்த குருக்கள் ஒருவர் திருநெல்வேலியிலிருந்து இறைவனின் தேவாமிர்தமனைய பிரசாதத்தை பக்குவமாக கொண்டு வந்துநீட்டியபோது அவரது பக்தியை மெச்சிய போதும் அதை வாங்கியுண்ண விரும்பாமல், கொண்டு போங்கள் உமதுஎச்சிற்படுத்தப்பட்ட பிரசாதம் எனக்கு வேண்டாம் என்று கூறினார்.

### நாய்க்குட்டிக்கு உணவு
குருக்கள் ஏமாற்றமும்வியப்பும் அடைந்து தமது வீட்டில் மனைவியிடம் இது எச்சிற்படுத்தப்பட்டதா? என வினாவினார். அங்கே குழந்தைகள் அதை அசூசிப்படுத்தியதாக அறிந்து பிரமித்துப்போனார். ஒருநாள் செல்லப்பர் உணவை உண்பதற்கு எடுத்தபோது ஒருநாய்க் குட்டியொன்று அவரின் காலடியை நக்கியவாறு பக்கத்தில் நின்றது அதன் கர்ம பலனை உடனடியாக உணர்ந்த சுவாமிகள் தனது உணவின் ஒரு பகுதியை நாய்க்குட்டிக்கு வைத்துவிட்டு "நீ உண்டபின் உன்வழியே போ" என்று விடை கொடுத்தார். நாய்க்குட்டி உண்டபின் நடந்துபோன வழியில் கார் நெரிந்து உடனடியாகவே இறந்து போயிற்று.

### யோகர் சுவாமிகள்
தேர்முட்டிப்படி மேலே சிங்காரமாயிருந்த செல்லப்பரை தனது தோழர்களுடன் தரிசிக்க எங்கள் குருநாதர் யோகர் சுவாமிகள் சென்றார். யோகர் கிட்ட நெருங்குகையில் செல்லப்பரின் கோலத்தைப் பார்த்த உடனேயே கிடுகிடென நடுங்கத் தொடங்கிவிட்டார். யோகரை உற்றுப்பார்த்த செல்லப்பர் காலனெனக் கறுத்துச் சீறிப் பேசாதன எல்லாம் பேசி "யாரடா நீ" என அதட்டினார். செல்லப்பருக்குத் தான் தேடிய ஆள் தன்னிடம் வந்த சந்தோசத்தில் அவரைத் தன்வயப் படுத்தி 'தேரடா உள், தீரடாபற்று பாரடா வெளியில்' என்னும் மொழிகளை 'யாரடா நீ' என்பதன் விடைகளாக புகட்டினார்.

### கீரிமலை நீராடல்
'யாரடா நீ' என்ற மாத்திரத்தே தம் சற்குருவின் அருளைப் பெற்ற இளைஞர் யோகநாதன் தம் சற்குருவை நாடத் தொடங்கினார். ஆனால் செல்லப்பரோ இவரைப் படாத பாடு படுத்தினார். பேசாதன எல்லாம் பேசினார் ஆனால்யோகரோ கூசாமல் அவரைத்தொடர்ந்தார் கீரிமலைக்கு வா நீராடி வருவோம்' என செல்லப்பர் அழைக்க யோகரும் அவரைப் பின் தொடர்ந்தார். கீரிமலையை அண்டியதும் இருவரும் நீராடாமலே 'நீராடிவிட்டோம் வா போவோம்' என செல்லப்பர் சொல்ல மௌனமாக யோகர் அவருடன் திரும்பினார். சில வேளைகளில் நடு வெய்யிலில் இருவரும் பட்டினத்துச் செட்டியார்கடையில் மணிக்கணக்காக நிற்பர். செட்டியோ அவர்களைக் கண்டும் காணாதது போல்நின்று பின்னர் ஒரு சதம் பிச்சை போடுவார். அதை செல்லப்பர் கண்களில் ஒற்றி "இன்று எமக்கு நல்ல பிழைப்பு" என யோகருக்கு கூறி மகிழ்வாராம்.

## வாய்த்தர்க்கத்தை தீர்த்துவைக்க முனைந்தவர் தாக்கப்பட்டார்
(மந்திகை)

மது அருந்திக்கொண்டிருந்த இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தைத் தீர்த்து வைக்க முனைந்தவர் தாக்கப்பட்டார்.

அண்மையில், கரவெட்டி பனைதென்னைவள அபிவிருத்திச் சங்க சமாசத்தின் கிளையான கொற்றாவத்தை மதுபான விற்பனை நிலையத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்த, மதுபானவிற்பனை நிலைய முகாமையாளர் அரசரட்ணம் ஜெயாரூபன் என்பவர் பருத்தித்துறை ஆதரா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

### பன்றித் தலைச்சிப் பொங்கல்
இருவரும் சேர்ந்து பக்குவமாக ஒரு சோறும் ஒரு கறியும் வைப்பார்கள். சாப்பிடப் போகும் தறுவாயில் வயிற்றைப் பார்த்து செல்லப்பர் 'இன்றைக்கு நீ பட்டினி என பானையையும் சட்டியையும் அடித்து உடைப்பார். அன்று முழுதும் இருவரும் பட்டினி தான்.'

பங்குனித் திங்களில் இருவரும் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாளை நாடிப் பொங்கிப் படைத்து மகிழும் நியமமுள்ளவர்களாக இருந்தனர். யோகர் குருவாக்கைத் தட்டாது கீழ்ப்படிந்து வந்தார். குருவும் சீடரின் பரிபக்குவ நிலையை நன்குணர்ந்து, ஒருநாள் யோகரைப்பார்த்து 'இங்கே இரு' எனத் தேரடியில் இருத்திவிட்டுச் சென்றார். செல்லப்பா சுவாமிகள் மூன்று நாட்கள் கழித்து வந்தே யோகரைத் தட்டியெழுப்பினார்.

### யோகர் செத்தார்
ஒருமுறை இப்படித் தவம் புரிந்தபின் குருவின் ஆசியுடன் யோகர் கதிர்காமத்திற்குப் பாதயாத்திரையாகச் சென்றார். பலகாலமாக யோகரைக் காணாத உறவினர்கள் செல்லப்பரிடம் சென்று விசாரித்தனர். செல்லப்பர் 'யோகன் எப்பவோ செத்துப்போய் விட்டான்' என விடை பகர்ந்தார். அழுதுகதறிய உறவினர்கள் யோகருக்குச் செய்யவேண்டிய அபரக்கிரியைகளை செய்தனர். ஒருநாள் யோகர் கதிர்காம யாத்திரையால் திரும்பி வந்தார். உடனே யோகரின் உறவினர்கள் செல்லப்பரிடம் சென்று ஏன் இப்படிப் பொய் சொன்னீர்கள் என்று வினாவினராம். அதற்கு செல்லப்ப சுவாமிகள் 'நான்சொல்லுவது முழுவதும் உண்மை' யோகன் எப்பவோ செத்துப் போய்விட்டான்' என்றாராம் உறவினர்களும் இந்தப் பைத்தியத்திடம் என்னபேச்சு என்று அவ்விடத்தை விட்டகன்றார்களாம்.

இப்படி நாற்பது வருடங்களாக செல்லப்பர் தமது பைத்தியக் கோலத்தைச் செம்மையாக நடித்தார். அவர் யோகர்சுவாமிகளுக்கு 'சாமி காட்டாதே சாமிகாட்டினால் யாழ்ப்பாணத்தான் தலையிலை ஏறிக் கூத்தாடுவான்' என்று எச்சரிக்கையும் செய்துள்ளார். தமது சமாதியை முன்னரே உணர்ந்து ஒரு அன்பரிடம் 'இன்றுஇரவு ஒரு புதினம் நிகழும். நீ இங்கு வருவாயோ' என்றார். ஆனால் அவரால் அன்றிரவு அங்கு போகமுடியவில்லை. அடுத்த நாட்காலை அங்கு சென்ற அவர் செல்லப்பரின் உடம்பு ஒரு சிறுபிள்ளை போல் விரலை வாயில்வைத்தபடி காலொன்றை மடக்கி நடராச பாவத்தில் வைத்த வண்ணமுமாய் விறைத்து இருப்பதைக் கண்டார்.

நல்லை நகர் வைகி நானிலத்து மாந்தர்களின் அல்லற் பிறவியறுத்தாண்ட செல்லப்ப ஆசான் 1915 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் அச்சுவினியில் விதேக முக்தியடைந்தார்.

## வருடாந்த மஹோற்சவம்
(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தாளையடி அருள்மிகுஐயனார் ஆலயவருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும், 6ஆம் திகதிவெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

தாவடி அருள் மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் வரும் வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சித்திரை வருடப் பிறப்பன்று தேர் திருவிழா நடைபெறும். (உ-6)

## இராசி பலன்
27.3.2001
(பங்குனி 14, செவ்வாய்)
துதியை மு.ப. 8.29 வரை
அச்சுவினி மு இ 8.38 வரை
ராகு காலம் 3 14-4 44
சுப நேரம் 10.44- 12.14
அமிர்தசித்தம்

சௌபாக்கிய கௌரி விரதம்

**மேடம்**
மனச் சஞ்சலம், சயனசுகம், முயற்சி பலிதம், போசன சுகம்.

**இடபம்**
அலைச்சல், காரியதாமதம், கோபப்படுதல், நித்திரைக் குறைவு.

**மிதுனம்**
தனலாபம், கீர்த்தி, காரிய நிறைவு, நண்பர்கள் சந்திப்பு.

**கடகம்**
தொழில் சிறப்பு, முயற்சிகை கூடும், நல்ல செய்தி, கீழ்ப்படிவு.

**சிங்கம்**
அதிகாரிகள் வெறுப்பு, பிரயாணம், புதிய திட்டம், கட்டுப்பாடு.

**கன்னி**
வீண் தொல்லை, நோய் உண்டாதல், காரியத் தடை, பிரயாண பயம்.

**துலாம்**
ரோகம், வாகன வசதி, போசன சுகம், தன வரவு.

**விருச்சிகம்**
நிலை மாற்றம், திடீர் பயணம், சந்தோசம், முயற்சி கை கூடும்.

**தனு**
புத்திரரால் கவலை, வியாதி, முயற்சி தாமதம், அமைதிக் குறைவு.

**மகரம்**
அரச நன்மை, உறுவினர் வெறுப்பு, பயந்த சுபாவம், காரிய மந்தம்.

**கும்பம்**
பிரயாணம், தனலாபம், காரிய ஜெயம், சகோதரர் உதவி.

**மீனம்**
உஷ்ண ரோகம், விவாதம், முயற்சிதாமதம், தனவிரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## காணாமற்போனோர் தொடர்பான விசாரணை உறவினர்க்கு அழைப்பு
(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்த 96–97 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற் போனோர் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப் பொலிஸார், மேலும் சிலர் தொடர்பான விசாரணைகளுக்காக அவர்களுடன் தொடர்புடைய சாட்சியங்களையும் உறவினர்களையும் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துள்ளனர்.

அவர்களது பெயர் விபரம் வருமாறு,

அன்போன்ஸ் அன்ரன் இல. 01, மத்தியகிழக்குவீதி, குருநகர் யாழ்ப்பாணம் கோவை இல: பி 95

ஐயம்பிள்ளை நிருஷன் கைதடி கிழக்கு நுணாவில் கோவைஇல: பி-89

வல்லிபுரம் பாஸ்கரன் மறவன்புலவு கிழக்கு சாவகச்சேரி கோவைஇல: பி-85

காணாமற்போனோர் சார்பாக இவர்களுடன் தொடர்புபட்டவர்கள், உறவினர்கள், சாட்சிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் நாவற்குழி வடக்கு கைதடி (காணாமற் போனவர்) விசாரணைக்கு அழைக்கப்பட்டோர் - சிதம்பரப்பிள்ளை கௌரி, சிதம்பரப்பிள்ளை நாகேஸ்வரி. (உ-10)

## வாள் வெட்டுக்கு இலக்காகியவர் ஆஸ்பத்திரியில் அனுமதி
(மந்திகை)

பருத்தித்துறைகரையோரப் பகுதியில் இடம் பெற்ற குழு மோதல் சம்பவம் ஒன்றில் வாள் வெட்டுக்கு இலக்காகியதுடன் அடிகாயங்களுக்கு உட்பட்டு ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனியன்று இடம் பெற்ற மேற்படி மோதல் சம்பவத்தில் வேறும் இருவர் காயமடைந்த நிலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றிருப்பதாய்த் தெரியவந்துள்ளது. (உ-23)

## சர்வமதக் குழுவினர் மீண்டும் வன்னிக்குவிஜயம்
(கொழும்பு)

சர்வமதக்குழுவினர் அடுத்த மாதம் மீண்டும் வன்னிக்குச் செல்ல ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சமாதான முயற்சிகளுக்கு உந்துதல் கொடுக்கும் வகையில் விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்களிடம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இச்சர்வமதக் குழுவினர் வன்னிக்குச் செல்வதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவைச்சந்தித்து பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ)


13th Death Anniversary



PONNAMMAH ARULAMPALAM
Fondly Remembered
by her
Children: THAVAMANY NADARAJAH
(Ramani)
NAVAMANY SELVARAJAH
(Ranee)
Grand Children: DUSHAN, JANEY
(2622)

### புலிகளின் நல்லெண்ண நடவடிக்கைகளை

# அரசு உதாசீனம் செய்வது; முழு நாட்டையுமே அழிவின் பாதைக்கு இட்டுச் செல்லும்

### வல்லை நகராட்சி மன்றத் தலைவர் எச்சரிக்கை

[வடமராட்சி கிழக்கு]

சமாதானப் பேச்சுக்கு முன்னோடியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நான்காவது தடவையாக மேலும் ஒரு மாதத்திற்கு ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை நீடித்துள்ளனர். ஆனால், இந்த அறிவிப்புசெவிடன் காதில் ஊதிய சங்கு போல் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது.

சமாதானத்திற்கு முன்னர் படை நடவடிக்கைகள் நிறுத்தல், ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம், இரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் போன்றவை இடம் பெறுவதை உலக வரலாறு காட்டி நிற்கிறது.

விடுதலைப்புலிகளால் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ள 4 வது யுத்த நிறுத்த நீடிப்பு மற்றும் அது தொடர்பான அரசின் இன்றைய நிலைப்பாடு தொடர்பாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம்படை நடவடிக்கை நிறுத்தம் என்ற நிலைப்பாட்டுக்குப் பதிலாக கொடூரமான குடி மக்கள் மீதான விமானத் தாக்குதல்கள் கடலில்மீன்பிடிக்ககடுமையான கட்டுப்பாடுகள் என்ற புதிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இரு கைகளையும் கட்டிக் கொண்டு இருப்பவனைத் தாக்குவது மட்டுமன்றி, அவனுடைய உறவினர்கள், நண்பர்களைத் தாக்குவது போல இந்த நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இலங்கைஅரசுதன்னுடைய இன அழிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி சமாதானப் பேச்சுக்கு முன்வர வேண்டும். சட்ட பூர்வமான அரசாங்கங்கள் ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தங்களைஅறிவிக்கும்பொழுது தீவிரவாத இயக்கங்கள் அவற்றை ஏற்காமல் விடுவதுதான் உலகில் பரவலாக நடைபெற்ற நிகழ்வுகள். ஆனால் இங்கே விடுதலை இயக்கம் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவிக்க அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளாமல் மௌனம் சாதிக்கின்றது. இதன் மூலம் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் என்பது சமாதான அகராதியில் இருந்தே அகற்றப்படுமா என்றஅச்சம் எழுந்துள்ளது. தமிழ் அமைச்சர் ஒருவர் அரசாங்கம் புலிகளுடன் பேசாது என்று குறிப்பிட்டதை ஊர்ஜிதம் செய்வதைப் போலவே நிகழ்வுகள் இடம் பெற்று வருகிறது.

இந்தக்கடைசிச் சந்தர்ப்பத்தையும் அரசாங்கம் கைநழுவ விடுமானால் மோசமான விளைவுகளை தென்னிலங்கை உட்பட அனைத்துப் பகுதி மக்களும் அரசாங்கமும் எதிர்கொள்ள வேண்டி இருக்கும் எனவும் சமாதானம் என்பது எட்டாக்கனியாகமாறக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம் எனவும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்கவிரும்புகிறேன்.

சமாதானம் ஏற்பட முடியாமைக்கான மிகப் பெரும் பொறுப்பை இலங்கை அரசே ஏற்க வேண்டியிருக்கும் என்பதையும், புலிகளை ஒழித்துக் கட்டி விட்டு அல்லது ஓரம் கட்டி விட்டு அரை குறைத் தீர்வைத் தமிழ்மக்கள் மீது திணிக்கலாம் என்ற அரசாங்கத்தின் எண்ணம் வெறும் பகல் கனவாகவே முடியும் என்பதையும் அகிலம் அறிய கூறிவைக்க விரும்புகிறேன். (உ-43)

## விபத்தில் காயம்

(மந்திகை)

கொற்றாவத்தை பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த தம்பிராசா சிறீதரன் (வயது25 ஆழக்கிணற்றடி இமையாணனைச் சேர்ந்த அருணி சிறீரஞ்சன்(வயது 24)ஆகிய இருவருமே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-24)

## வருடாந்த உற்சவம்

(சங்கானை)

பண்ணாகம்- விசவத்தனை முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை தேர் உற்சவமும்மறுதினம் தீர்த்த உற்சவமும்தொடர்ந்து பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

திருவிழா நாட்களில் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினரால் தொடர் சொற்பொழிவும் இடம்பெற்றுவருகிறது. (உ-124)

### க. பொ. த. (சா. த)

## கற்ற மாணவர்களுக்கு தொழிற்துறை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகள் தோற்றியும் உயர் கல்வியைத் தொடர வாய்ப்பில்லாது போன மாணவர்களைக் கருத்திற்கொண்டு தொழில்துறை சார்ந்த திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளதாக யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம், வீட்டு மின் இணைப்பு, வானொலி திருத்துதல், சைக்கிள் பழுது பார்த்தல், தமிழ்-சுருக்கெழுத்து, தட்டெழுத்து போன்ற தொழிற் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் வரும் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் யாழ். வலயக்கல்விப் பணிமனையில் உள்ள முறைசாராக் கல்விப் பிரிவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகள் தளர்வின்றி நகர்ந்து செல்கின்றன

### நோர்வே தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த களத்தில் அரச படைகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளும் கட்டுப்பாடாக நடந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் இலங்கையின் சமாதான முயற்சிகள் திருப்திகரமான முறையில் முன்னேற்றமடைந்து வருகின்ற தென இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்ப்போர்க் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் நேரான பாதையில் சரியான திசையில் நகருகின்றன.

சமாதான முயற்சிகள் திருப்தி கரமாக நடைபெறுகின்றன. அதில் எவ்வித தளர்வுகளும் தற்பொழுது இல்லையென்று இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக தனது நம்பிக்கையை வெளியிட்டுள்ளார். (இ)

## சபாநாயகர் கியூபா விஜயம்

(கொழும்பு)

கியூபாவில் நடைபெறவிருக்கும் அனைத்துலகப் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள இலங்கையிலிருந்து சபாநாயகர் அநுர பண்டார நாயக்கா தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றுசெல்ல இருக்கிறது.

144 நாடுகள் இககூட்டத்தில் கலந்து கொள்ள இருக்கின்றன. (து)

### கண்காணிப்புக் குழுவில்

## இந்தியா விரும்பாத நாடுகளுக்கு இடமில்லை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கான கண்காணிப்புக்குழுவில் இந்தியா விரும்பாத நாடுகளை இடம்பெறச் செய்வதற்கு அனுமதிக்கப் போவதில்லை என நோர்வேத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினையில அன்ரன் பாலசிங்கம் முக்கிய பங்காற்றுவதனால் அவரது நடவடிக்கைளுக்கு எத்தகைய தடைகளும் போடக் கூடாது

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகராக அன்ரன் பாலசிங்கம் இருந்த போதும் அவரே பிரச்சினையில் பிரதான பத்திரம் வகிக்கின்றவர்.

வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே எரிக்சோல் இவ்வாறு கூறியுள்ளார். (செ)

### கடற்படை

## துப்பாக்கிப் பிரயோகம் மீனவர் காயம்

(மந்திகை)

பருத்தித்துறை கற்கோவளம் கடற்பரப்பில் கடல் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம், கடற்படையினர் நடத்தியதுப்பாக்கிப் பிரயோகத்தில்காயமடைந்த ஒருவர்பருத்தித்துறைஅரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் மருதங்கேணியிலிருந்து இடம் பெயர்ந்து கற்கோவளத்தில் வசித்து வந்த இராசையா யோகலிங்கம்(வயது45)என்பவரே காயமடைந்து சிகிச்சை பெற்றுவருகிறார். (உ-43)

# விவசாயிகள் நலன்பேண உழவர் சந்தைஅமைப்பதுஅவசியம்

### அரச அதிபர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கட்டடத் தொகுதியின் சில அறைகளை மக்களுக்குத் தொண்டாற்றும் பொது அமைப்புக்களுக்கு வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கத்தயாராக உள்ளதாக அதன்தலைவர் க.மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபை கொளவனவு செய்த இருமாடிக் கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் நடைபெற்ற போதுதமது, தலைமை உரையில்அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கோணாவளைவீதி, திருநெல்வேலியில் உள்ள மேற்படி பிரதேச சபையின் அலுவலகத்தை யாழ்.அரச அதிபர் சண்முகநாதன் வைபவரீதியாக திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் அரச அதிபர் உட்படக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கமலநாதன், கரவெட்டிப் பிரதேச சபைத்தலைவர் வ.நடராஜா கமநல சேவை உதவி ஆணையாளர்.சுந்தரேசன் நல்லூர் பிரதேச சபை உதவி உளளுராட்சி ஆணையாளர்சிவராஜலிங்கம் ஆகியோரும்நல்லூர்ப் பிரதேசசபைஉத்தியோகத்தர்கள், பிரதேசசபைக்குஉட்பட்ட ச.ச.நிலையங்களின்பிரதிநிதிகள், சமுர்த்தி முகாமையாளர்கள்ஆகியோரும் பங்குபற்றினர்,

தொடர்ந்து உரையாற்றிய தலைவர், தமதுபிரதேச சபையின் தேவைகளுக்கு இடவசதிபோதாமல்இருந்ததனாலேயே மேற்படி கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், தொடர்ந்து திருநெல்வேலிபொதுச்சந்தையை விஸ்தரிக்கும் முகமாக சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தைப் பொறுப்பேற்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொக்குவில் பொதுச் சந்தைக்கு 5 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யாழ் அரச அதிபர் தமது உரையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள் அனைத்தும் யாழ்.மாவட்ட சுகாதாரத்திற்கும், யாழ். நூலக விஸ்தரிப்பிற்கும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அத்துடன் உழவர் சந்தை ஒன்றை அமைப்பதற்கு நல்லூர் பிரதேச சபை உதவ வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்தார். (உ-10-2)

### யா.உயர்தொழில்நுட்ப நிறுவன

## காணிக் கொள்வனவு அமைச்சர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்கான காணிக் கொள்வனவை துரிதப்படுத்தும் வகையில் விரைந்து நடவடிக்கை எடுப்பதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கென திறைசேரியால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி 40 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதால்,

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்கான காணிக் கொள்வனவு தாமதமாகும் நிலை ஏற்பட்டிருப்பது குறித்து சம்பந்தப்பட்ட மாணவப் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டதை அடுத்து அமைச்சர் இவ்உறுதிமொழியினை வழங்கியுள்ளார். [உ-3]

### சுன்னாகம் ஹரிஹர புத்திரர் (ஐயனார்)

### மஹோற்சவத்தை ஒட்டிய கவிதை

சுன்னை ஐயப்பன் திருவடி தொழுதால்
பின்னை பயமேன் வாழ்வினில் என்றும
அன்னை பூரணி புட்கலை யுடனே
என்னை ஆட்கொளும் ஐயப்பா சரணம்

கவிஞர் துரையர்

# பக்திமயமான சூழலை கெடுக்காவண்ணம் ஆலயத்திற்கு செல்லுதல் அவசியம்

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆலயங்களிற்கு செல்வோர் பக்திமயமான சூழலைக் கெடுக்காத வண்ணம், தெய்வீக எழிற் கோலமாகச் செல்வது அவசியமாகும். ஆடம்பர உடைகளோ அல்லது அளவிற்கு மீறிய நகைகளோ அணிந்து ஆலயத்திற்குச் செல்லுதல் ஏற்புடையதல்ல.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் இலங்கை கிளையினர் விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எமது இந்து ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவங்கள் பங்குனி மாதம் முதல் ஆவணி வரையிலுள்ள காலங்களில் சிறப்பாக நடைபெறுவது வழமை.

இக்காலங்களில் சரித்திரப் பெருமை வாய்ந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், அளவெட்டி கும்பளாவளை விநாயகர் ஆலயம், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், நல்லூர் கந்தசாமி கோவில், தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயம், செல்வச் சந்நிதி முருகன் ஆலயம், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம போன்றவை மிகச் சிறப்பாக தம் மஹோற்சவங்களை நடத்தி சைவ உலகிற்கு அரும்பெரும் தொண்டாற்றி வருகின்றன.

இவ் வண்ணம் அமையும் பெருவிழாக்களில் பெருந்தொகையான அடியார்கள் பங்கு கொண்டு ஆலயச் சூழல்களில் பலவகையான சரியைத் தொண்டுகள் புரிந்தும் அன்னதானம் செய்தல் தண்ணீர்ப்பந்தல் வைத்தல் போன்றவற்றை முன்எடுத்தும் காவடி எடுத்தும்,

அங்கப்பிரதிஷ்டை செய்தல் போன்ற நேர்த்திகளை நிறைவேற்றியும் இறையருளைப் பெறுகிறார்கள். இதனால் நாமும் எமது வருங்கால சந்ததியினரும் இறைவழி நின்று நேர்வாழ்வு வாழமுன் மாதிரியாகவும் திகழ்கிறார்கள்.

இதே சமயம் இவ்விழாக் காலங்களில் சான்றோர்களாலும் பெரியோர்களாலும் ஏற்றுக் கொள்ள முடியாத பலவிதமான சமூகச் சீர்கேடுகளும் கலாசாரச் சீரழிவுகளும் இடம் பெறுவது கண்கூடு இவ்வாறான சீரழிவுகளினால் பக்தர்களும் சைவ மக்களும் ஆலய பரிபாலகர்களும் மிகவும் மனவேதனைக்கு உள்ளாகிறார்கள். சைவ மதமும் அதன் பழம் பெருமைகளிலிருந்து வேறுபடுகின்றது. இவற்றைப் பல செய்தித்தாள்கள் பல முறை வெளிப்படுத்தியிருக்கின்றன.

இவ் வகையான அசௌகரியங்கள் ஏற்படாவண்ணம் நாமும் எமது மதமும் வளர்ச்சியடைய வேண்டுமானால் சில பல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்படுகின்றது. வியாபார நோக்கோடு நடத்தப்படும் ஸ்தாபனங்களை ஆலய அண்மையில் அமைக்காது, தொலைவில் அமைப்பதை ஆலய நிர்வாகம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விழாக்களைச்சாக்காகக் கொண்டு கேளிக்கை நிகழ்வுகள் நடாத்துவதையோ பிறரால் நடத்தப்படுவதையோ தடைசெய்ய வேண்டும். இவற்றால் வீண்பணவிரயமும் அமைதியின்மையும் ஏற்படுகிறது.

ஆலய அண்மையில் மதுபான விற்பனை நிலையங்களையோ, புலால் விற்பனை நிலையங்களையோ அமைப்பதற்கு ஆலய நிர்வாகம் அனுமதிக்கக் கூடாது. மீறி இந்நிலையங்கள் செயற்படின் ஆலயத்தொண்டர்கள் மூலமாகவோ பொதுமக்கள் மூலமாகவோ இவற்றைத்தடை செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து உரிய நேரத்தில்தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் ஆண்கள், பெண்கள் தமிழ்ப்பண்பாட்டைப்பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்து வருவதுவரவேற்கத்தக்கது. தலைவிரி கோலமாக ஆலயத்திற்கு செல்வதை தவிர்த்து தெய்வீக எழிற்கோலத்தில் எமது கலாசாரத்திற்கு அமைய படாடோபமின்றிபங்கு கொள்வது விரும்பத்தக்கது.

ஆலயங்களிற்கு தெய்வீக சிந்தனை தவிர்ந்த வேறுஎனச் செய்கைகளில் ஈடுபடாது அமைதி பேணுதல் மிக அவசியம். எவ்விதமேனும் ஆலய ஒழுங்குகளுக்கு மாசு ஏற்படா வண்ண நடந்து பக்தர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

மேற்கூறிய நடைமுறைகளிற்கமைய இனிவருங்காலங்களிலாவது செயற்பட உறுதி பூண்டு ஒழுகிவருவதன் மூலம் வேற்று மதத்தினர் நம்மை கீழ்த்தரமாக எண்ணிக்கேலி செய்வதில் இருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

இவற்றைக் கருத்தில் கொண்டு எம்மையும் எமது மதத்தையும் எமது சமூகத்தையும் மேம்படுத்த உதவுமாறு, சைவநன்மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வதோடு இந்நடைமுறைகளையும் கண்காணிக்க ஆலய அறங்காவலர்கள், பரிபாலன சபையினர், குருமார்கள் வழிபாட்டாளர்கள் அனைவரும் முனைப்புடன் செயற்படுவது தலையாய கடமையாகும்;

இக்கடமைகளை முன்னெடுப்பதற்கு அந்தந்த ஆலயங்கள் அமைந்துள்ள பிரதேச சபைகளினதும் இந்து சமய அமைப்புக்களினதும் கண்காணிப்பு வரவேற்கத் தக்கதாகும்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் இடப்பெயர்வுக்கு முன்னர் தையல் பயிற்சி, தட்டச்சுப் பயிற்சி, தும்புப் பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகளுக்கான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை மு.ப 9.30 மணிக்கு பருத்தித்துறையில் இயங்கும் பளைப் பிரதேச செயலக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிகளைப் பெற்றவர்களும் இவ்வருடம் தும்புத் தொழில் பயிற்சியினைப்பெற ஆர்வம் உள்ளவர்களும் கடந்த வருடம் இடப்பெயர்வால் தும்புத் தொழில்பயிற்சியினை தொடரமுடியாமல் போனவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (உ)

### விசாரணைக்கு அழைப்பு

காணாமல் போனோர் சம்பந்தமான விசாரணைக்காக கொக்குவில் கிழக்கு ஜே127 கிராமஅலுவலர் தர்மலிங்கம் இரத்தினேஸ்வரன் என்பவரை அப்பகுதியைச் சேர்ந்த கனகலிங்கம் ஆனந்த இராணி என்பவருடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி விசேட புலனாய்வு பொலிஸார் அறிவித்துள்ளனர். (உ-2)

### இன்று கூட்டம்

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று மு: ப:10 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது:

இக்கூட்டம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது: [உ-75]

## திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள் வெளியாகின

யா/வலயக் கல்வித் திணைக்களத்தினால் வலயமட்ட ரீதியில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியில் பரிசு பெற்றவர்களது பெயர் விபரங்கள் நிலை ரீதியாகத் தரப்படுகிறது.

தரம் 3 யா/கரந்தன் இராமுபபிள்ளை வித்தி செலவன் சி. பிரகாஷ் 1, யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி செல்வி சி. தயிரா 2, யா/புனிதஜோன்பொஸ்கோ செல்வி நிசா சண்முகநாதன்3

தரம் 4 யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாட செல்வி ஜெ அபிரா 1, யா/அச்சுவேலிம விசெல்வி தை.சிலோசனி 2, யா/சென்ஜோன்ஸ் கலலூரி செல்வன். ந. தார்மீகன 3,

தரம் 5 யா/இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை செல்வி செ. மாதங்கி 1, யா/புனித ஜோன் பொஸ்கோ வித் செல்வன். சி.கௌசல்யன் 2, யா/கோப்பாய் ம.வி செல்வி வி. பிரவீனா 3.

தரம் 6 யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி செல்வி ச. சத்தியநாயகி, யா/புத்தூர் சோமஸ்கந்தா செல்வி பா.விதுசாயினி 2, யா/சுண்டுக்குளி மகளிர் செல்வி செ. கிரேஸ் சுஜசிந் கென்ஸ்மன் 3.

தரம் 7 யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி செல்வி ச.பைரவி 1, யா/கந்தர்மடம் சைவப்பிரகாசவித்தி செல்வி கு. லக்ஷாயினி2, யா/வாதரவத்தை விக்னேஸ்வரா செல்வி இ. கோபிகா 3.

தரம் 8 யா/சுண்டுக்குளிமகளிர் செல்வி இ. சுபா 1, யா/நீர்வேலி சி சி தக பாட செல்வி அ. திவ்வியா 2 யா/இந்துமகளிர் கல்லூரி செல்வி இ. தர்ஷிகா 3,

தரம் 9 யா/வேம்படிமகளிர் செல்வி ச. மகிழினி 1, யா/புத்தூர் சோமஸ்கந்தா செல்வி இ சசிதா 2, யா/புனிதபத்திரிசியார் கல்லூரி செல்வன். யோ. பிரவீந்தரா 3,

தரம் 10, 11 யா/ வேம்படி மகளிர் கல்லூரி செல்வி பே. சாளினி 1, யா/ கொக்குவில் இராமகிருஷ்னா இ. மஞ்சுளா 2, யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி இ. கஜானா 3.

தரம் 12, 13 யா/ புனித பத்திரிசியார் கல்லூரி செல்வன் றெ. செறில் 1, யா/ கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி செல்வி த. சிந்துஜா 2, யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி யோ. சுபாஜினி 3.

## பண்ணைப் பாலத்தால் பிரயாணம் செய்வது சிரமம்

(ஊர்காவற்றுறை)

யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்துவெளியேற்றப்படும் கழிவுநீர்க் குழாய் பண்ணைப் பகுதியில் சேதமடைந்து காணப்படுவதை அடுத்து புனரமைப்பு வேலைகள் இடம்பெறுவதனால் அதனூடாகப்போக்குவரத்துகளை செய்வதில் பெரும் சிரமங்கள் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

பிரதான வீதியின் மருங்கில் கிடங்கு வெட்டப்பட்டு மண் குவிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்துப்பாதைகுறுகியுள்ளது.

இதனால் இப்பகுதியில் பேருந்து ஓட்டுவது சாரதிகளின் திறமைக்குச் சவால் விடுப்பதுபோல் அமைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-75]

## இலவச பாடப் புத்தகங்களை பிரதிபண்ணும் பாடசாலை மாணவர்

### பணச்செலவென பெற்றோர் தரப்பில் அதிருப்தி

(துன்னாலை)

இலங்கை கல்விச்சேவை ஆணைக்குழுவின் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு பட்ட பாடப்புத்தகங்கள் மாணவர் மத்தியில் ஒழுங்காக விநியோகிக்கப்படாமையினால், அவர்கள் பெரும் சிரமங்களினை எதிர்கொண்டிருப்பதாக பெற்றோர் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் ஒரு சில பாடப்புத்தகங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும்,

அவர்களது கல்விச்செயற்பாட்டில் பாடப்புத்தகங்களே பாரிய பங்களிப்புச் செய்யும் தேவை இருப்பதால், தமக்கு விநியோகிக்கப்படாத பாடப் புத்தகங்களை பல ரூபா செலவழித்து பிரதி செய்து வருவதாகவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், பாடசாலைகளுக்கு தேவையான அளவு இலவச பாடநூல்கள் வழங்கப்படாமையால். அவற்றை மாணவர் மத்தியில் விநியோகிப்பதில் பாடசாலைச் சமூகத்தினர் மிகுந்த இடர்ப்பாட்டினை எதிர்நோக்கிவருவதாகவும் கூறப்படுகிறது. (உ-4)

### காந்திமதி வெற்றியீட்டியது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில்தம்பாட்டி காந்திமதி இளைஞர் கழகம் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (உ-75)

### திருட்டுமுயற்சி முறியடிப்பு

[யாழ்ப்பாணம்]

சுண்டுக்குளி பிளர்சஸ் வீதியின் ஆயர் இல்லத்தின் பராமரிப்பில் உள்ள வீடுஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

ஆயர் இல்ல பராமரிப்பில் உள்ள வீட்டின் 13 கதவுகளைக் கழற்றிய திருடர்கள் அதேவீதியில் உள்ள ஒருவரது வீட்டில் அவற்றைக் கொண்டு போய் வைத்துள்ளனர்.

மறுநாள் காலை வீட்டைப் பார்க்கச் சென்ற வீட்டின் உரிமையாளர் தனது வீட்டில் கதவுகள் இருப்பது தொடர்பாக அப்பகுதி கிராமசேவையாளருக்கு அறிவித்து கிராம சேவையாளர் ஊடாக ஆயர் இல்லத்தினருக்கு அறிவித்து கதவுகளை உரியவரிடம் சேர்ப்பித்தார். [உ-104]

## 2020 இல் இலங்கை ஜனாதிபதியாக தமிழர்

### தூரநோக்கு கருத்து

(யாழ்ப்பாணம்)

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஜனாதிபதியாக தமிழர் ஒருவரே விளங்குவார் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வெளியிட்ட 'தூர நோக்கு '2020' நிகழ்ச்சித் திட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் ஆவணத்தில் மேலும் இலங்கை ஜனாதிபதி என்ற வகையில் 2020 ஆம் ஆண்டு சுதந்திரதின வைபவத்தில் உரையாற்றும் ஒரு தமிழர் இந்நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்று 20 ஆண்டுகள் முன் எவரும் கற்பனை செய்திருக்க மாட்டார்கள்:

கடந்த 15 ஆண்டுகளில் நாடு அடைந்துள்ள பொருளாதார வளர்ச்சியை நாம் பேணிப் பாதுகாத்தல் வேண்டும் என்று குறிப்பிடுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இந்தியாவில் இருந்து ஆடு, மாடுகள் தருவிப்பு

(தென்மராட்சி)

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்படவுள்ள 100 மில்லியன் டொலர் நிதிக்கு ஜேஸி இன மாடுகள் மற்றும் யமுனாரி ஆடுகள் தருவிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர்கே. சண்முகநா தெரிவித்துள்ளார்.

இவை மிகவிரைவில்இந்தியாவில் இருந்து நேரடியாக பருத்தித்துறை துறைமுகத்துக்கு கொண்டுவரப்படும் எனவும் தெரியவந்துள்ளது. (உ-77)

## இன்று ஒரு தகவல்

### திருடனை பிடித்த விதம்

இராஜகிரி மன்னனின் படுக்கை அறையிலிருந்த விலையுயர்ந்த நவரத்தின மாலை களவு போயிற்று. அங்கு வந்து போவோர் மூன்று காவல் வீரர்களே. அந்த மூவரில் யாரோ ஒருவன் தான் அதனைத் திருடியிருக்க வேண்டும். ஏனெனில் வேறு யாருமே அந்த அறைக்குள் வரவில்லையே. ஆனால் அவர்களிடம் எப்படி விசாரித்துப் பார்த்தும் ஒன்றும் தெரியவில்லை. அப்போது மூவருக்கும் மரணதண்டனை விதிக்கப் போவதாக மன்னன் கூறினான். அருகில் நின்ற மந்திரியோ 'பாவம்' இந்த மூவரில் ஒருவன் தான் திருடன். அவனோடு குற்றமற்ற இருவருமா உயிரை இழப்பது? திருடன் யார் என்பது எனக்குத் தெரியும். நான் இன்னும் சில வினாடிகளுள் கண்டுபிடித்துச் சொல்லி விடுகின்றேன் பாருங்கள் என்றான்.

பிறகு மந்திரி மூவரையும் பார்த்து, 'தலையாரியின் வெட்டு வாளைப் பார்த்து நீங்கள் மூவரும் பயப்பட வேண்டாம். இப்போது அவன் திருடனின் தலையைத்தான் வெட்டிப் போடப்போகிறான். அவனிடம் திருடன் யாரென்று நான் சொல்லியிருக்கிறேன். மூவரும் தலையைக் குனிந்து உட்கார்ந்து கொண்டு கடைசிமுறையாகக் கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள்' என்றான்.

மூவரும் உட்கார்ந்து தலை குனிந்து கொண்டனர். ஆனால் அவர்களில் பாலையன் என்பவன் மட்டும் அவ்வப்போது தலையைத்திருப்பித் தலையாரியைப்பார்க்கலானான், இதை மந்திரி மன்னனுக்குக் காட்டி 'இவன் தான் திருடன்' என்றான். அரசாங்க வீரர்கள் பாலையனின் வீட்டைச் சோதனை போட்டதும் நவரத்தின மாலை கிடைத்தது. மன்னன் தன் மந்திரியைப் பாராட்டிப் பரிசளித்தான். பாலையனுக்குச் சிறைத்தண்டனை கிடைத்தது.

நன்றி
அம்புலிமாமா 1982

# பொ.ஐ.ஐ.மு.யின் ஆட்சிக்காலம்
# தமிழர்களின் வாழ்வில் இருண்டயுகம்

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலம் தமிழர்கள் வாழ்வில் இருண்டயுகம் என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் யாழ். மாவட்ட உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு அரசியல் யாப்பின் 13 வது சீர்திருத்தச் சட்டத்தில்தான் தீர்வு இருக்கிறது என்றால், ஏன் கடந்த ஆறுவருடங்களாக அதனை நிறைவேற்ற முடியாது போனது.

ஐ தே.கட்சி பதினேழு வருடம் செய்த அதே தவறை பொ. ஐ. ஐ. முன்னணியும் செய்யவேண்டும் என்பதில்லை ஆனால் அதே தவறைத்தான் பொ. ஐ. ஐ. மு. யும் செய்கிறது.

இக்காலப் பகுதிக்குள் தான் மிகமோசமான மனித உரிமை மீறல், கைது, தடுத்துவைப்பு என்பன அதிகரித்துள்ளன.

விடுதலைப் புலிகள் நான்காவது தடவையாக யுத்த நிறுத்த அறிவிப்பு செய்துள்ள போதிலும் அரசாங்கம் எவ்வித பொறுப்புணர்வும் இன்றியிருக்கிறது.

என்று அவர் பாராளுமன்றில் பேசுகையில் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

## பயிற்சிப் பட்டறை

[வட்டுக்கோட்டை]

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டு வருகிறது.

இருபத்தைந்து மணித்தியாலங்களைக் கொண்ட இப் பயிற்சிப் பட்டறையில் வலிமேற்கு பிரதேச செயலர் மற்றும் விரிவுரையாளர்கள் பங்குபற்றி கருத்துரை வழங்கி வருகின்றனர்;

இதில் புதிதாக நியமனம் பெற்ற இருபது சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் உட்பட நாற்பது உத்தியோகத்தர்கள் பங்குபற்றி வருகின்றனர்.

(உ-24)

## க.பொ.த (சா.த) பரீட்சை
## யா. மத்திய கல்லூரியில் 96 வீத மாணவர் சித்தி

(யாழ்ப்பாணம்)

யா/ மத்திய கல்லூரியில் இருந்து கடந்த வருடம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 96 சத வீதமான மாணவர்கள் சித்தியடைந்திருப்பதாக பாடசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பாடசாலையில் இருந்து இப் பரீட்சைக்கு 125 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 120 மாணவர்கள க பொ த (உ/த) வகுப்பில் கல்வி கற்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்

அத்துடன், இப்பாடசாலையில் 3 மாணவர்கள் 7 டி, 4 சி உ னும், 5 மாணவர்கள் 6 டி, 5 சி உடனும், 4 மாணவர்கள் 5 டி, 6 சி உடனும் 8 மாணவர்கள் 4 டி. 7 சி உடனும் சித்தி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-3)

# யாழ். குடாநாட்டிற்கான கப்பல் கட்டணத்தைக் குறைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கான கப்பல் பயணத்திற்கு தற்போது அறவிடப்படும் கட்டணத்தைக் குறைக்குமாறும் கப்பல் போக்குவரத்து மீதான பொருட்கள், சேவைகள் வரியை (ஜீ.எஸ்.ரி) நீக்குமாறும்; யாழ். கப்பலில் பொருட்களை ஏற்றும் வணிகர் கழகம் அரசியல் அமைப்பு கைத்தொழில் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல்; பீரிஸிற்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளது.

இலங்கையின் வேறு எந்தப் பகுதியையும் விட யாழ்ப்பாணத்தில் வாழ்க்கைச் செலவுகள் மிகவும் அதிகமாகவுள்ளன.

இதற்கு நாட்டு நிலைமையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த முனையும் சில சக்திகளே காரணம் என்று ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் சுட்டிக் காட்டியுள்ளதாக வணிகர் கழகம் தெரிவித்துள்ளது;

பொதுக் கேள்விப் பத்திரம் ஒன்றின் மூலம் ஏனைய தரப்புகளும் கப்பல் சேவையை நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் இதற்கான உரிய பதில் கிடைக்கவில்லை என்றும் வணிகர் கழகம் மேலும் தெரிவித்துள்ளது;

(செ)

## உடையமைத்தல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்விப்பிரிவினரால் உடையமைத்தல் பயிற்சிநெறி யாழ். இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதால்,

பயிற்சியில்சேர விரும்புவோர் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக பி. பகல் 3.00 மணிமுதல் 5.00 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவித்துள்ளனர்.

(வ)

## மாதர் முன்னேற்றச்சங்க கட்டடம் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பொன் வடக்கு மாதர் முன்னேற்றச்சங்கக் கட்டடம் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிப்புற்றிருந்த மேற்படி கட்டடத் திருத்தத்திற்கான நிதியை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிதியில்இருந்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

புனரமைக்கப்பட்ட மாதர் முன்னேற்றச்சங்கக் கட்டடத்தில் யுவதிகளுக்கான தையல், தும்புப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

(உ-75)

## கடத்தப்பட்ட இரு விவசாயிகள் மீண்டனர்

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட பொத்துவில் பிரதேசத்தில் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட இரண்டு விவசாயிகளை அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களில் ஒரு விவசாயி தப்பிச் சென்று பொலிஸில் முறையிட்டதைத் தொடர்ந்து அதிரடிப்படையினர் கடத்தல்காரரைத்தாக்கி மற்றவிவசாயியையும் மீட்டுள்ளனர்.

(உ-7)

## மாதாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களின் மாதாந்த ஒன்றுகூடல் கடந்த வெள்ளியன்று உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இவ் ஒன்றுகூடலின் போது பாடசாலைகளுக்கு ஏற்கனவே வழங்கிய புத்தகங்கள் தவிர மீதமாக இருந்த புத்தகங்கள் பாடசாலைகளின் தேவைக்கேற்ப விகிதாசார அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன; அவற்றின் விபரம் மற்றும், பாடசாலை வரவு-செலவுத்திட்டம், நேரசூசி, தளபாடப் பற்றாக்குறை சம்பந்தமான விபரங்கள் என்பனவும் கோட்டக் கல்விப் பணிப்பாளரால்பாடசாலை அதிபர்களிடம்இருந்து கோரப்பட்டுள்ளன.

(உ-2)

## சாவ. கைத்தொழில் வணிகர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் தலைவர் த. இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் எம் எஸ் சரவணபவ பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி நகர கிராம சேவையாளர் எஸ். இராசரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றவுள்ளனர்.

(உ-77)

## தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் விடுதலை

(கொழுமபு)

கொழும்பு புறக்கோட்டை பிரதான வீதி இல - 46 ல் அமைந்துள்ள தேநீர் கடை ஒன்றினுள் 2 கிரனைற்றுக்களும்ஒரு வயர்த்துண்டும்கண்டெடுக்கப்பட்டதை அடுத்து கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருந்த நவராசா, நடேசன் ஆகியோர் அண்மையில் கொழும்பு கோட்டை மஜிஸ்திரேற், பிரியந்த பெர்னான்டோவினால் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அடுத்த வீட்டுக்காரரான கோயில் மதகுருவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவரது தூண்டுதலின் பேரில் பாதுகாப்புப் படையினரே கிரனைற்றை கடையினுள் வைத்தனர் என்று சட்டத்தரணி மல் காந்தி விக்கிரமநாயக்க தெரிவித்ததன் பேரில் பிணை அனுமதி வழங்கப்பட்டது: விசாரணைகள் ஏப்பிரல் 25 இல் நடைபெறும்.

(உ)

## அச்சுவேலிப் பகுதியில் பயன்தரு மரங்கள் கண்டபாட்டில் தறிப்பு

[தென்மராட்சி]

அச்சுவேலி இடைக்காடு வளலாய், புத்தூர் போன்ற பகுதிகளில் பயன்தரும் மரங்களான வேம்பு, பலா, மா, புளி போன்றவை கண்டபடி தறிக்கப்பட்டு வருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விறகுத் தேவைக்காகவும், தளபாடத் தேவைகளுக்காகவும்இவை தறிக்கப்படுவதால் மேற்படி . பகுதிகளில் இந்த வகை பயன்தரும் மரங்களின் விலைபெருமளவில் அதிகரித்து வருகிறது.

பயன்தரும் மரங்கள் வெட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த அரச அதிகாரிகள உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாய சம்மேளனப்பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-77)

## பூரான்கடிக்கு இலக்கான இருவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் இரு வேறுஇடங்களில் பூரான் கடிக்குள்ளான இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் தோட்டத்தில் வெங்காயம்அறுவடை செய்து கொண்டிருந்தசமயம் பூரான் கடிக்குள்ளான வல்லி இலட்சுமி [வயது 65], திக்கத்தைச் சேர்ந்த ஆனந்தராசா தீபன் (வயது 16) ஆகிய இருவரும் பூரான் கடிக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

[உ-23]

# சமூகச் சீர்கேடுகளை தவிர்க்க ஊர்காவல் குழுக்கள் அமைப்பு
## நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஏற்பாடு

(மந்திகை)

நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எ. தகம்பத்தின் ஏற்பாட்டில் கரவெட்டிப்பகுதியில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் ஊர்காவல் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பரவலாக இடம் பெறும் களவு, சட்டவிரோத மின்பாவனை, கசிப்பு உற்பத்தி சமூகத் தகராறுகள் என்பவற்றை தடுத்தல் மற்றும் சம்பந்தப்பட்டவர்களை நாடி இப் பிரச்சினைகளைத் தடுப்பது தீர்ப்பதுமுதலானகடமைகளில் இக் குழுக்கள் ஈடுபடவுள்ளன.

நெல்லியடி பொலிஸ்நிலையப்பிரிவிலுள்ள 26கிராமஅலுவலர் பிரிவுகளில் பரீட்சார்த்தமாக 5 கிராம அலுவலர் பிரிவுகளில் இவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்தாய்-ஜே/381, கரவெட்டிமேற்கு-ஜே/363 நெல்லியடிகிழக்கு-ஜே/377, கரணவாய் கிழக்கு-ஜே/361 கரவெட்டி வடக்கு ஜே/364 ஆகிய பிரிவுகளிலேயே தற்போது ஊர்காவல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(உ-23)

# இந்தியாமீது விதித்த தடையைத் தளர்த்த அமெரிக்கா முடிவு

(வாஷிங்டன்)

அணுவாயுதப்பரிசோதனை தொடர்பாக இந்தியா மீது அமெரிக்கா விதித்திருந்த தடைகள் சிலவற்றை நீக்கப் போவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கோலின்பவல் தெரிவித்துள்ளார்.

1962 ஆம் ஆண்டு அமுல்ப் படுத்தப்பட்ட தடைகள் சில அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் காலத்திலும் நீக்கப்பட்டிருந்தமையும், அதனைத் தொடர்ந்து புஷ்நிர்வாகத்திலும் மேலும் இந்தியாமீதான தடைகளை நீக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் அமெரிக்காவுக்கான தூதுவர் லலித் மான் சிங்கிடம் மேற்படி செய்தியை தெரிவித்ததாக தூதுவர் தெரிவித்தார். (உ-து)

## உலக தரிசனம்

# பாகிஸ்தான் புரிந்த சதிவேலையே தான் பதவி விலகுவதற்குக் காரணமாம்

### சீற்றம கொள்கின்றார் பெர்னாண்டஸ்

இந்திய இராணுவ ஆயுதப் பேர ஊழல் விவகாரத்தில் பாகிஸ்தான் சதிவேலை புரிந்துள்ளதாக பதவி விலகிய முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்தெரிவித்துள்ளார்.

இராணுவ ஆயுதப்பேர ஊழல் விவகாரத்தை அம்பலப்படுத்திய டெஹல்கா டாட்காம் இணையதளப் பின்னணியில் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவுப் பிரிவின் சதிவேலை உள்ளதாகவும் கூறியுள்ளார்:

ஆயுதவியாபாரிகள் போல் நடித்து இவ்உளவு அமைப்பினர் நாட்டிற்குள் ஊடுருவி இந்திய இராணுவத்தின் மதிப்பு மரியாதையை கெடுக்கும் வகையில் ஐ.எஸ் ஐ செயற்பட்டுள்ளதாக பெர்னாண்டஸ் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (உ-9)

# வாஜ்பாய் அரசு, பதவி கவிழும் நிலை ஏற்படாது

### கருத்துக்கணிப்புகள் தெரிவிப்பு

(புதுடில்லி)

டெஹல்கா இணையத்தளம் வெளியிட்ட ஆயுத பேர ஊழல் விவகாரத்தால் வாஜ்பாய் அரசு கவிழும் நிலை ஏற்படாது என கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

டி. ஆர். எஸ் என்ற ஆராய்ச்சி நிறுவனம் இந்தியாவின் நான்கு பெரு நகரங்களில் இதுதொடர்பாக கருத்துக்கணிப்பு ஒன்றை நிகழ்த்தி முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

அம்முடிவின் பிரகாரமே ஊழல் குற்றச்சாட்டுக்களால் பிரதமர் வாஜ்பாய் அரசு பதவிவிலக வேண்டிவராது எனவும், இவ்விவகாரத்தை அவர் திறமையாகக் கையாளுகிறார் எனவும் உறுதியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அக் கருத்துக்கணிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 32 சதவீதத்திற்கு குறைவானவர்களே கூட்டணி அரசு பதவிவிலக வேண்டும் என்று கருத்துத்தெரிவித்துள்ளனர்.

அத்துடன் 46 சதவீதம் பேர் பிரதமர் வாஜ்பாய் இந்த பிரச்சினையை முறையாகக் கையாளுகிறார் எனவும் 29 வீதம் பேர் தங்களுக்கு திருப்தி இல்லை எனவும் 25 சதவீதம்பேர் எந்தக்கருத்தும் தெரிவிக்கவிரும்பவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது அத்துடன், அக்கருத்துக் கணிப்பின்படி 55 சதவீதம் பேர் வாஜ்பாயையும் 24 சதவீதம்பேர் சோனியாவையும் 18 சதவீதம்பேர் ஜோதிபாசுவையும் பிரதமராக தேர்ந்தெடுக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். (உ-9)

# புறூண்டி புதை குழியில் இருநூறுக்கும் மேற்பட்ட சடலங்கள்

(சிங்கப்பூர்)

புறூண்டியின் தலைநகர் அருகே பாரிய மனிதப்புதை குழி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அதில் இருநூறுக்கும் மேற்பட்ட சடலங்கள் காணப்படுவதாக புறூண்டி காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இந்தச்சடலங்கள்புறூண்டி கூட்டு கெரில்லாக்களுக்கும் அரசபடைகளுக்கும் இடையில் நடந்த யுத்தத்தின்போது மாண்டவர்களின் உடல்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அநேகமான சடலங்களில் இராணுவ உடைகள் காணப்பட்டனவென்றும் பெண் இராணுவத்தினரின் உடல்களும் காணப்பட்டதாகவும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# நீண்டநாள் தீவுகள் பிரச்சினைக்கு ரஷ்ய - ஜப்பான் தலைவர்கள்தீர்வு

(டோக்கியோ)

ஜப்பானிய பிரதமர் ஜெசிரோமோரிரஷ்யாவிற்கு சென்றுள்ளார்.

மகத்தான வரவேற்பளிக்கப்பட்ட பிரதமர் ஜெசிரோமோரியும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும் பேச்சுவார்த்தைகள், நடத்தியுள்ளனர்.

இருதரப்புப்பொருளாதார ஒத்துழைப்புப் பற்றியும் நீண்ட நாட்களாக இருநாடுகளுக்குமிடையே இருந்து வந்த நான்கு தீவுகள் பற்றியும் பேசப்பட்டதாகவும் அதில் தீர்க்கமான முடிவு காணப்பட்டதாகவும் அதன்படி இருதீவுகளை ஜப்பானுக்கு கொடுப்பதற்கு ரஷ்யா முன் வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பல நாட்கள் அரசப் பயணமாக ரஷ்யா சென்றிருக்கும் ஜப்பான் பிரதமர் சில தினங்களில் நாடு திரும்புவார் என்று அரச குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. (து)

# மத்தியஸ்தம் வகிப்பதை சி. ஐ. ஏ நிறுத்தவேண்டும்

(வாஷிங்டன்)

பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பாதுகாப்புக் குறித்த சமாதானப் பேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிப்பதை சி. ஐ. ஏ நிறுத்திக்கொள்ளவேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யுபுஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரண்டு நாடுகளும் தங்களுக்கிடையே பரஸ்பர பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே தான் இவ் அறிவிப்பை வெளியிட்டிருப்பதாக புஷ் தெரிவித்துள்ளார். (உ-9)

## செய்திப்பரல்

★ அண்மையில் பிறேசிலில் பெய்த பெருமழை காரணமாக சாவோ பவுலோவில் உள்ள சுப்பர் மார்க்கெட் ஒன்றின் கூரை இடிந்து விழுந்துள்ளது.

★ வடகொரியா தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்காக தென்கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் பேச்சு நடத்தவுள்ளன.

★ மஸடோனியாவின் சிவில் நிர்வாகத்தை அச்சுறுத்தி வரும் அல்பேனியரின் கிளர்ச்சி நடவடிக்கை அப்பகுதியில் மேலும் பரவி வருகின்றது.

★ கயானா ஜனாதிபதித் தேர்தலில் இந்திய வம்சாவழித் தலைவர் ஒருவர் வெற்றி பெற்றதை அடுத்து அங்கு எதிர்க் கட்சியினர் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

★ பிறேஸிலின் உலகப் பெரும் எண்ணெய் அகழ்வு மேடை கடலில் மூழ்கியதில் 11 பேர் மரணம் அடைந்துள்ளனர் (உ 9)

# நவாஷ் ஷெரீப் தலைமையிலான கட்சி இரண்டாகப் பிளவுண்டது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான்முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரீப்பின் கட்சி இரண்டாகப் பிளவுண்டுள்ளது.

கட்சியிலிருந்தமூத்த உறுப்பினர் ஒருவர் கருத்து வேறுபாடு காரணமாக சில உறுப்பினர்களுடன் கட்சியிலிருந்து விலகிப் புதிய கட்சியை ஆரம்பித்துள்ளார்.

நவாஷ்ஷெரீப்பின் கட்சி பிளவுபட்டதற்கு மூல காரணம் இராணுவ ஆட்சியாளரின் சதிவேலையென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# எதிர்க்கட்சிகள் ஆதாரமற்ற குற்றச்சாட்டு அவர்கள்முயற்சிபலிக்காது

(புதுடில்லி)

ஒளிப்படக் காட்சியை மாத்திரமே ஆதாரமாக கொண்டு எதிர்க்கட்சிகள் அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்து வருகின்றன.

அவர்களது முயற்சிக்கு என்றுமே நாம்பணிந்துபோக மாட்டோம் என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அமைச்சர்கள் மற்றும கூட்டுக்கட்சிகள் கலந்துகொண்ட நிகழ்வொன்றில் கூறியுள்ளார்.

இணையத் தளம் ஒன்றின் திருகு தாளத்தால் இடம் பெற்ற காட்சிகள் பற்றி விசாரிக்க தனிநபர் கமிஷன் ஒன்று நியமித்திருப்பதாகவும், அவ்வறிக்கை வரும்வரையாவரையும் அமைதி பேணும் படியும் எதிர்க்கட்சிகள் தங்களால் ஆனமட்டும்முயற்சித்துஇயலுமானால் ஜனநாயக அரசைக் கவிழ்த்துப்பார்க்கட்டும் என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார். (து)

# இந்தியாவின் 30வருடகனவு நனவாகுமா

(புதுடில்லி)

செய்மதிகளை விண்ணுக்கு எடுத்துச்செல்லும் றொக்கெட்டைப் பரீட்சிக்கும்முயற்சியில் இந்தியா இறங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சார்த்த றொக்கெட் வரும் புதனன்று சென்னைக்கு அண்மையில்உள்ள ஹரிக்கோட்டா என்னும் இடத்தில் இருந்து அனுப்பப் படவுள்ளது.

ஜி. எஸ். சல்விடியா என்ற இந்த றொக்கெட் இரண்டு தொன்பாரத்தை 36 ஆயிரம் கிலோமீற்றர் உயரத்திற்கு எடுத்துச்செல்லக்கூடிய ஆற்றல் உடையதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த றொக்கெட் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டால் இந்தியாவின்30 வருடக்கனவு நனவாவதுடன் அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் மற்றும சீனா போன்ற செய்மதி ஏவும் நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இணைந்துகொள்ளும் எனக் கூறப்பட்டுள்ளது. (உ-9)

## விமானவிபத்தில் 20 பேர் பலி

(பரீஸ்)

பிரான்ஸின் விமானநிலையமொன்றில் ஏற்பட்ட விமான விபத்தில் இருபதுபேர் பலியாகியுள்ளனர்.

பத்தொன்பது பேருடன் வந்துகொண்டிருந்த பிரான்சிய விமானமொன்று உள்ளூர் விமான நிலையமொன்றில் அவசரமாகத் தரையிறக்க முற்பட்டபொழுது தரையில் மோதியவேளை விமானநிலையத்தில் நின்றவர் உட்பட இருபதுபேர் இறந்தனர். (து)

# குறித்த திகதிக்கு முன்பாக பதவி விலக மாட்டேன்

### எதிர்க்கட்சிகளுக்கு சவால்

(டாக்கா)

பதவியில் இருந்து விலகுவதாக தான் அறிவித்த தினத்திற்கு முன்னதாக ஒருபோதும் பதவிவிலக மாட்டேன் எனவும்,

முடிந்தால் எதிர்க்கட்சிகள் தன்னைப் பதவிவிலக்கட்டும் எனவும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஷீனா சவால் விடுத்துள்ளார்

ஏப்பிரல் 17 இற்குப்பின் கட்சிப் பொறுப்பை இடைக்கால கட்சி சார்பற்ற அமைப்பிடம் கையளித்து விட்டு, தேர்தலை ஜூனில்நடாத்தத்திட்டமிட்டுளளதாகவும் ஏற்கனவே பிரதமர் அறிவித்திருந்தமையும், ஹஷீனா வரும் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் பதவிவிலகவேண்டுமெனவும் இல்லாவிட்டால் தொடர் கடையடைப்பு மேற்கொள்வோம் என்றும் எதிர்க்கட்சிகள் எச்சரித்திருந்தமையும் தெரிந்ததே.

மேற்படி எச்சரிக்கைக்கு பதில்தரும் வகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (உ-6)

# செய்தி ஊடகங்கள் மீது தலிபான்கள் பாய்ச்சல்; தம்மை அவதூறு செய்கின்றனவாம்

(வாஷிங்டன்)

மேற்குலகச்செய்தி ஊடகங்கள் தம்மைப்பற்றி உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்பிவருவதாக தலிபான்கள் குற்றம் சாட்டியுள்ளன.

தலிபான் வெளியுறவு அதிகாரி ரஹ்மதுல்லா ஹ்ஹாஸமி வாஷிங்டனுக்கு அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்:

தலிபான்கள் பயங்கரவாதத்துக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும் பெண்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொள்பவர்களாகவும் செய்தி ஊடகங்களால் சித்தரிக்கப் பட்டுள்ளது.

இதனால் மேற்கத்தைய மக்கள் எம்மை தவறான கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றனர்:இது வருந்தத்தக்க ஒன்றாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-9

கேடில் விழுச் செல்வம்கல்வி
ஒருவற்கு மாட(டு) அல்ல
மற்றையவை
குறள்

# வலம்புரி

## வான் கோழியின் மயிலாட்டம்!

கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களுக்கான ஒப்படை - செய்முறை - கணிப்பீட்டுப் பரீட்சை ஆகியவற்றைக் குறைக்குமாறு கல்வி அமைச்சு சகல கல்வித் திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளது. போட்டிப் பரீட்சை - தரப்படுத்தல் மூலம் பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானித்துக் கொண்டு ஒப்படைகள் - கணிப்பீட்டுப் பரீட்சைகளை அளவு கடந்து மாணவர்களிடையே திணித்தால் அது தேவையற்ற கல்விச் சுமையாக மாறி மனக் குழப்பத்தை - கற்றலில் வெறுப்பை ஏற்படுத்துமென்பது வெளிப்படை.

கடந்த இரு வருடங்களுக்கு முன் உயர்தர மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒப்படைகளும் மதிப்பீடுகளும் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் சுமையாகவே அமைந்து விட்டது.

என்ன செய்வது கல்விப் பணிப்பாளர்களும், அதிகாரிகளும் நிலைமையைப் புரிந்து கொண்டாலும், கல்வி அமைச்சின் கட்டளையாயிற்றே நல்ல பெயர் எடுக்கவேண்டுமாயின் நல்லதோ கெட்டதோ நமக்கேன் ஆய்வு, இட்ட கட்டளையை எப்படியும் செய்து முடித்து விடுவதே சிறப்பு என்ற வகையில் அவர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளது..

ஆனால் இப்பொழுது கல்வி அமைச்சு நிலைமையைப் புரிந்து சொண்டு ஒப்படை - கணிப்பீட்டுப் பரீட்சை ஆகியவற்றைக் குறைக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

ஓர் புதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தும் போது அதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதக விளைவுகளை நன்கு ஆராய்ந்து அறிமுகப்படுத்துவதே உத்தமமாகும். அதனை விடுத்து மாணவர்கள் மத்தியில் ஓர் திட்டத்தை அறிமுகப்படுத்திய பின் அதனை மாற்றுவது போன்ற செயற்பாடுகள்தொடர்ந்துவரும் காலங்களில் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகள் தமது நாட்டின் நிலைமைக்கமைவாக கல்வித் திட்டத்தைத் தயாரிக்காது வெளிநாடுகளின் கல்விக் கொள்கையை திணிக்கமுற்படுவது வான் கோழி மயிலாட்டம் ஆட முனைந்தது போலாகும்

# வெல்லம் என்னும் போசனை மூலக்கூற்றின் சமநிலைக் குழப்பத்தால் ஏற்படும் 'நீரிழிவு'

## மருத்துவ விளக்கம்

எமது உடலில் பேணப்பட்டுக் கொண்டிருக்கிறசமநிலையில் மாற்றம் அல்லது குழப்பம் ஏற்படும் நிலையே நோயாக வெளிப்படுகிறது. இச்சமநிலைக் குழப்பமானது கூடுதலாகக் குருதி இழையத்தில் ஏற்படும் சமநிலைக் குழப்பத்தாலேயே ஏற்படுகின்றது. அந்த வகையில் நீரழிவு வியாதியானது. குருதியில் காணப்படும் வெல்லம் என்ற போசனை மூலக் கூற்றுச் சமநிலைக் குழப்பத்தாலேயே ஏற்படுகின்றது. அதாவது குருதியில் வெல்லத்தின் அளவு சாதாரண உச்ச எல்லையை விடக் கூடுதலான நிலையில்காணப்படும். சாதாரண மனிதனின் உடலில்ஒவ்வொரு உணவு வேளையின் பின்பும்தற்காலிகமாகவெல்ல அளவுஉயர் நிலையில் காணப்படும். ஆனால் ஒரு மணித்தியாலம் தொடக்கம் ஒன்றரை மணித்தியாலயத்துள் இது சாதாரணவீச்சுக்குள் (வெல்ல அளவு) கொண்டு வரப்பட்டு விடும் இச்செயற்பாட்டில் இன்சுலின் எனும் ஓமோனே பிரதான காரணியாகவுள்ளது.

### நீரிழிவு என்றால் என்ன?

இன்சுலின் ஓமோனின் தொழிற்பாட்டின் சீரின்மை காரணமாக குருதியின் உயர் வெல்ல எல்லையைவிட அதிகமாக வெல்லம் தொடர்ந்து காணப்படும் நிலையே நீரிழிவு வியாதியாகும். இன்சுலின் தொழிற் பாட்டுச் சீரின்மை பின்வரும் இரு காரணங்களில் ஒன்றினால் ஏற்படலாம்.

1. இன்சுலின் சுரக்கப்படும் அளவு மிக மிகக் குறைவாக இருத்தல்.
2. இன்சுலின் தொழிற்படுகின்ற உடலிழையங்களில் வாங்கிகளின் குறைபாட்டினால் இன்சுலின் இனங்காணப்படாமை.

1:1 இன்சுலின் வயிற்றுக் குழியில் காணப்படும் சதையம் என்ற சுரப்பியின் பி-பீற்றா கலங்கள்எனப்படும். விசேட தொகுதியால் சுரக்கப்படும். ஆகவேசதையியில் ஏற்படும்குறைபாடுகள்காரணமாகஇன்சுலின்சுரப்புமுற்றாகவோ அன்றிப்பகுதியாகவோ பாதிக்கப்படலாம்.

2:1 தொடச்சியான பாவனையில் பொருட்களில் தேய்வுஏற்பட்டுதொழிற்படுதிறன்.

II குறைவடைவதுபோன்று, உடலிழையங்களில் உள்ள இன்சுலின் வாங்கிகளும் காலப் போக்கில் செயற்றிறன் குறைந்து காணப்படுகின்றது. இந்நிலையினால் நீரிழிவு நோய்வாய்ப்பட்டவர்களில் இன்சுலின் சுரப்பு சாதாரண அளவாக அல்லது கூடுதலாக இருந்த போதிலும் தொழிற்பாட்டுத் திறன் திருப்தியற்றுக் காணப்படுகின்றது.

**வைத்திய கலாநிதி**
**புவனேந்திரநாதன் ஆதவன்**
விரிவுரையாளர் மருத்துவ பீடம்
ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் கொழும்பு:

### இரு வகையினர்

நீரிழிவு வியாதியாளர்களைப் பிரதானமாக இரு வகையினராகப் பிரிக்கலாம்.

I இன்சுலினில் தங்கியுள்ள நீரிழிவு

II இன்சுலினில் தங்கியிராத நீரிழிவு

நீரிழிவு என்பது தனியொரு நோயல்ல இது ஒரு நோய்த்தொகுதியாகும். ஏனெனில் நீண்ட காலத்துக்குக் குருதியில் வெல்லத்தின் அளவு உயர்வாக இருப்பதால் இது மனித உடலின் பல பாகங்களிலும், அங்கத் தொகுதிகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அவற்றுள் பிரதானமாக நோய்க்குள்ளாகும் அங்கங்கள்:

1. சிறுநீரகம்
2. குருதிக் கலன்கள்
3. கண் (வில்லை)
4. சுற்றயல் நரம்புகள்
5. தோல்

### சிறுநீருடன் வெல்லம்

நீரிழிவு வியாதியால் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதால் எளிதாக இவர்கள் தொற்று நோய்களுக்கு உள்ளாவர். மேலும் காயங்கள், புண்கள் குணமடைய நீண்ட காலமெடுக்கும். இவ்வியாதியுள்ளவர்களின் சிறுநீருடன் வெல்லம் கழிக்கப்படுதல் நோயின் தீவிரத் தன்மையை வெளிப்படுத்தும். அதாவதுகுருதியில் வெல்லத்தின் அளவு மிகவும் அதிகமாகக் காணப்படும் போதே சிறுநீரகங்கள் வெல்லத்தை வடிகட்டும் திறன் குறைந்து சிறுநீருடன் வெல்லம் வெளிப்படுகின்றது.

நீரிழிவு நோயின் குணங்குறிகள் எவை?

1. அடிக்கடி சிறுநீர் கழித்தல்
2. தண்ணீர்த்தாகம் ஏற்படுதல்
3. நிறை குறைதல்
4. உடற் சோர்வுடன் உற்சாகம் குன்றிக் காணப்படுதல்
5. கண்பார்வை மங்குதல்
6. உடலில் ஒருவகைச் சொறிவு
7. அடிக்கடி எளிதிற்த தொற்று நோய்க்கு ஆளாதல்
8. கை, பாதப்பகுதிகளில் விறைப்பும்உணர்வுபதிப்பும்

மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் யாவும் ஒரு நோயாளியிடம் காணப்பட வேண்டியதில்லை. அத்துடன் நோயின் ஆரம்ப காலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட குணங்குறிகள் துலக்கமாகவும், ஏனையவை நோயின் முதிர்ச்சி நிலையில் பூரண சிகிச்சை இன்மையாலும் வெளிப்படுகின்றன. எது எவ்வாறாயினும் நீரிழிவு நோயாளி ஒருவர் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின்னர் (அண்ணளவாக இருபது வருடங்கள்) எந்தவொரு சிகிச்சை முறையினாலும் பூரண சுகதேகியாக இருக்க முடியாது. அதாவது மிகவும் கட்டுப்பாடான வாழ்க்கை முறையை அனுசரித்து இதன் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ள முடியும்.

### குணங்குறிகள்

மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் ஒவ்வொருவகை நீரிழிவு நோயாளர்களுக்கும் தனித்துவமாகக் காணப்படும். அதாவது இன்சுலின். தங்கியுள்ள நோயாளர் காட்டுங் குணங்குறிகள் ஒரு சில இன்சுலினில் தங்கியிராத நோயாளர் காட்டுங் குணங்குறிகளிலிருந்து வேறுபடும். பொதுவாக இன்சுலினில் தங்கியுள்ள நீரிழிவு நோயாளர் (IDDM) உடல் மெலிந்தவர்களாகவும் குறுகிய காலத்தில் கூடுதலான குணங்குறிகளை வெளிப்படுத்துபவர்களாகவும் மேலும் இளம் வயதிலேயே இக் குணங்குறிகளைக் கொண்டிருப்பவர்களாகவுமிருப்பர். ஆனால் இன்சுலினில் தங்கியிராத நோயாளர்கள் பொதுவாக உடல் பருத்தவர்களாகவும் வயது கூடியவர்களாகவும் (50 க்கு மேற்பட்டோர்) ஒரு சில குணங்குறிகளை கொண்டவர்களாகவும் இருப்பர். (மிகுதி அடுத்த வாரம் தொடரும்)

# யாழ்ப்பாணத்தானுக்குச் சாமி காட்டாதே என்ற தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகள்

செல்லப்பா சுவாமிகள் குருபூசைத்தினத்தைஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது

செல்லப்பசுவாமிகள் பிறந்த இடம் நல்லூர். கடையிற்சுவாமிகள், செல்லப்பாசுவாமிகள், யோகர் சுவாமிகள், தங்கள் அருள் தாகத்தை தீர்ப்பதற்கு நல்லூரானையும், நல்லூர் வீதியையுமே பெரிதும் தேர்ந்தெடுத்தனர். வட்டுக்கோட்டை வேளாரானவல்லிபுரத்திற்கும்நல்லூர் கோவில் அயலில் இருந்த பொன்னார் எனும் அன்னைக்கும் பிறந்த ஞானக்குரவனே செல்லப்பராவார். செல்லப்பாபிறந்த வீடு நல்லூரானின் வெளியோரமாகத் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. செல்லப்பர் இளமையில் கந்தர் மடத்து சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், பின்னர் யாழ். மத்தியகல்லூரியிலும் கல்வி கற்றதாக அறிய முடிகின்றது. படிப்பை முடித்த பின் கச்சேரியில் ஆராய்ச்சியாகப் பணிபுரிந்தவர்.

### பித்தரானார்

செல்லப்பர் உள்ளத்தில் ஊறிய ஞானப் போக்கு வெளியே வழியத் தொடங்கிய வேளையில் பித்தர்போலவும், பிசாசு பிடித்தவர்போன்றும் குழந்தை போன்றும் இருந்தது தமக்குள்ளேயே பேசிக் கொள்ளல், ஓமோம் என்று தலையசைத்தல் வலக்கையை மேலே உயர்த்தி விசுக்கி உரத்துப் பேசி வருவோர் போவோரை தம்மை அண்டவிடாது துரத்துதல் போன்றன நிகழ்ந்தன. அவர் தமக்கு அண்மையில் சென்றோரை தூற்றத் தொடங்கியகாலத்திலேயேதமதுஉத்தியோகத்தையும் உதாசீனம் செய்து கச்சேரித் தொடர்பையும் துண்டித்து தேரடியில் குந்தியிருக்கத் தொடங்கினார். இதனால் அவரது விசர்க் கோலத்தைக் சண்ட் குடும்பத்தினர் மிகவும் மனம் வருந்தினர்.

### கடையிற் சுவாமி

ஒரு நாள் அவரின் போக்கு மித மிஞ்சியதாக இருந்ததால் அவரது குடும்பத்தினர் அவரை விலங்கிட்டு வைத்திருந்தனர். அப்பொழுது கடையிற் சுவாமிகள் நல்லூரை வட்டமிட்டுக் கொண்டிருந்த வேளை செல்லப்பரை அண்டிய கடையிற் சுவாமிகள் செல்லப்பரை உற்று நோக்கிய படியே இருந்தார்.

சிலநிமிடங்கள் உற்றுநோக்கிய கடையிற் சுவாமிகள் 'நன்றாகமுற்றிவிட்டது. அவிழ்த்து விடுங்கள்' என்றார். வீட்டுக்காரரோ இது பரிகாரத்தைக் கடந்து விட்ட வைத்தியம்என மெல்ல அவிழ்த்து விட்டனர். செல்லப்பர்நேரே தேர் முட்டிப் படியில் அமர்ந்தார். சில வேளைகளில் சிரித்துக் கொண்டு நல்லூர் வீதியை வலம் வருவார். பசி வந்த போது செம்மணிப் பிரதேச வயல் வெளிக்கு சென்று கொடுத்ததை வாங்கி உண்பார். இவரது உடன் பிறந்த சகோதரி செல்லாச்சி அவர்கள் சகோதர பாசத்தால் ஈர்க்கப்பெற்று உரியவேளையில் ஆகாரங்களை கொண்டு சென்று

**நல்லூரான்**

→ 2ஆம் பக்கம் பார்க்க

## தவக்காலச் சிந்தனை 28



''ஒன்றா இரண்டா? முப்பத்தெட்டு ஆண்டுகள்...'' இனியும் குணமாக முடியுமா? வழியில்லை அப்படியே நலமடைந்து இனி என்ன செய்யப்போகிறேன்? நலமடைய வேண்டும் எனும் ஆவலும் விருப்பமும் கூட இந்த மனிதனிடம் வறண்டு போகும் நிலையில் தான் வாழ்வின் ஊற்றாம் இறைமகன் இவரை சந்திக்கிறார். ''எழுந்து உம் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும்'' எழுதுவதும், நடப்பதும் சுத்தமாக மறந்து விட்டிருந்த மனிதனுக்கு மீண்டும் இப்புதிய வாழ்வு எதிர்பாரா கொடை தான். தன்னை 38 ஆண்டுகளாக சுமந்த படுக்கையை தான் சுமந்து நடக்கிறான். எனக்குப் பழகிப் போச்சு...இது மாறாது... இனிமேல் இப்படித்தான் என்று வீழ்ந்து கிடக்கும் உடல், மனம், அறிவு, மனசாட்சி அனைத்தையும் இறைவார்த்தையானவர் தட்டி எழுப்புகிறார். நலமடைந்து எழுந்து நடக்க மனமிருந்தால் அவர் தம் வார்த்தையின் வளமை புது வாழ்வைத் தரும். எழுந்து நடக்க இதயம் தான் வேண்டும்!

**காவலன்**

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1622)

# எமக்கு ஏற்பட்ட அவமானம்
# எந்த பெண்ணுக்கும் ஏற்படக்கூடாது

## மன்னாரில் கைதான பெண்கள் தெரிவிப்பு

(மன்னார்)

கடந்த 18ந் திகதி இரவு எம்மைக்கைது செய்த கடற்படையினர் மன்னார் கிளர்ச்சித் தடுப்புப் பொலிசாரிடம் ஒப்படைத்திருந்தனர். அங்கு பொலிசார் எமது ஆடைகளைக் களையுமாறு உத்தரவிட்டுத் துன்புறுத்தினர். இதற்கு மறுப்புத் தெரிவித்த போது என்னுடன் கைது செய்யப்பட்ட மற்றைய பெண்ணின்ஆடையை பொலிசார் கிழித்ததுடன் அவரை நிர்வாணமாக்கி எனது சட்டையைக் களையுமாறு துன்புறுத்தினர். அதனால் அந்தப்பெண் எனது ஆடைகளை களைந்தாரென்று ரெலோ வன்னிமாவட்ட எம்.பி செல்வம் அடைக்கலநாதனிடம் இருபெண்களும் முறையிட்டுள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கிளர்ச்சித் தடுப்புப் பொலிசாரினால் துன்புறுத்தி மானபங்கப்படுத்தப்பட்ட இரு பெண்களையும் நேரில் சென்று செல்வம் அடைக்கலநாதன் பார்வையிட்டார்.

கிளர்ச்சித்தடுப்புப் பொலிசாரினால் நிர்வாணமாக்கப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான பெண்கள் இருவரும் மேலும் தெரிவித்திருப்பதாவது;

எங்களுக்கு நேர்ந்த இச்சம்பவத்தினால் வெளியில் உயிருடன் வாழமுடியாதுள்ளது. எமக்கு நடந்த இந்த சொல்லமுடியாத துன்பம் வேறெந்தப் பெண்ணுக்கும் ஏற்படக்கூடாது என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாக செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதுடன் மனிதஉரிமை ஆணைக்குழுவுக்கும், தொல்லை தவிர்புக் குழுவுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

(ம)

## கிரிக்கெற்சபையின்
# நிறைவேற்று அதிகாரி விலக்கப்பட்டார்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரிரம்நுக்கரணதுங்க நேற்று அப்பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

கடந்த 4மாத காலமாக அவர் பல்வேறுமுறைப்பாடுகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டு வந்தார் விசாரணை முடிவில்நேற்று பதவியில் இருந்து விலக்கப்பட்டு முன்னாள் கிரிக்கெட்அணியின் தலைவர் அனுரத்தென்னக்கோன் அப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளாரென கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திலங்கசுமதிபால தெரிவித்துள்ளார்.

பதவிவிலக்கப்பட்ட ரம்நுக்கரணதுங்க முன்னால் இலங்கைஅணியின் தலைவர் அர்ஜீணரணதுங்கவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ந-7)

Jaffna
Technical Institute
Jaffna-SriLanka
Regd NO. 15251 T.P. 3335

தொழிற் பயிற்சிகள்

★ Radio, T. V. and Video Deck Repairing
சகல இன ரேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

★ Motor Rewinding and Electrical Wiring
சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

★ Motor Cycle Mechanism
சகல இன மோட்டார்சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)

★ Air Conditioning and Refrigeration

## ஜனாதிபதி

வெளிநாட்டமைச்சர் ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

பிரான்ஸ் செல்லும்ஜனாதிபதி விடுதலைப்புலிகளைத் தடைசெய்யுமாறு பிரான்ஸ் அரசைக் கோருவார் என்றும் இனப்பிரச்சினையின் தற்போதைய நிலைப்பாடு குறித்தும் பேசுவாரென்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

(வ)

## கோபுர ---

மேலும் தெரிவித்துள்ளன.

இதே வேளை ரெலிக்கொம் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட கோபுரத்திற்கு கோடிக் கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த தெடர்பு சாதனக் கருவி பொருத்தும்வரை தொலை பேசி இணைப்புகளில் இருந்து வரும் சிரற்ற நிலை தொடர்ந்தும் இருக்குமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

[வ].

## புலிகளின் ---

வித்த எரிக்சோல், சமாதான முயற்சியில் நடுநிலையாளர்களாக கடமையாற்றும்போது நாம் சில கட்டுப்பாடுகளுடன் நடந்துகொள்ள வேண்டும்.

நோர்வே அரசை இதுவரை எந்தவொரு அரசும் சமாதான முயற்சியில் ஈடுபட வேண்டாமென உத்தியோக பூர்வமாகக் கோரவில்லை.

விடுதலைப் புலிகள் [யுத்த நிறுத்தம்செய்ததும், அதனை நீடித்து வருவதும் எனக்கு ஆச்சரியத்தை தரவில்லை.

மங்கையர்மனம்மயங்கும்
மங்காத அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1623)

## கோப்பாய்---

தப்பிச் சென்றுவிட்டதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம்தொடர்பாக நீர்வேலி இராணுவமுகாமைச் சேர்ந்த 2ம்லெப்டினன் சமிந்தலசந்தரட்ணபால கோப்பாய் பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

மரணவிசாரணையைபதில் நீதவான் மு.திருநாவுக்கரசு நடத்தினார்.

(இ-06)

## புலிகளை---

படவில்லை என்ற அறிக்கையினைப் பெற்று அனுப்பியுள்ளார். இதனை அடுத்துவிடுதலைப் புலிகளைத் தடை செய்யும் பிரேரணை பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டாலும் புலிகளின் அரசியல் பிரிவு பிரிட்டனில் இயங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் தென்படுவதாக இராஜதந்திரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில் உள்ள ஐ.ஆர்.ஏ அமைப்பு அந்த தடை செய்யப்பட்ட போதிலும் அதன் அரசியல் பிரிவு பிரிட்டனில் செயற்பட்டு வருவதைப் போல் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியும் செயற்படலாம் என்றும் ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

புலிகளின் அரசியல் பிரிவான ''விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி'' 1989ம் ஆண்டு மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(வ)

## ஆயிரக்

மாதம் படையினர் கைப்பற்றிய கிளிநொச்சியை விடுதலைப்புலிகள் 1998ம் ஆண்டு மீண்டும் கைப்பற்றினர். அத்துடன் ஆனையிறவு மற்றும் வெற்றிலைக்கேணி பகுதிகளையும் அவர்கள் பலப்படுத்தியிருந்தனர்.

கடந்த வருடம் ஆனையிறவு படைத்தளத்தில் படையினருக்கு படுதோல்வி ஏற்பட்டதுடன், வன்னிப்பகுதியில் 1997ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'ஜயசிக்குறு'

★ **Motor Cycle Mechanism**

சகல இன மோட்டார்சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)

★ **Air Conditioning and Refrigeration**

சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி யளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

★ **City and Guilds of London Exam**

(1) Power (2) Electronics

புதிய பயிற்சிகள் ஆரம்பம்-
06-04-2001 (கிழமை நாட்களில்) 07-04-2001 (சனி, ஞாயிறு நாட்களில்)

**N. B:-**

★ பயிற்சி நெறிகள் யாவற்றுக்கும் ஒரு வருட முழுநேரச் செய்முறைப் பயிற்சி (Practical Training) அளிக்கப்படும்.

★ பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோருக்கு மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

★ தனிப்பட்ட வகுப்புக்களில் [Personal Class] கற்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ 1998 — 1999 ஆண்டில் பயிற்சி நெறிகளையும், செய்முறைப் பயிற்சிகளையும் முடித்துக் கொண்ட மாணவர்களில் இதுவரை சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத வர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**- DIRECTOR -**

521, Stanley Road,
Jaffna.
(றெயில்வே கடவை அருகில்)

No. 7 Palaly Road,
Jaffna.

(கி/1701)


தான் முயற்சியில் ஈடுபட வேண்டாமென உத்தியோக பூர்வமாகக் கோரவில்லை?

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம்செய்ததும், அதனை நீடித்து வருவதும் எனக்கு ஆச்சரியத்தை தரவில்லை. ஏனெனில் அவர்கள் சமாதானத்தில் கொண்டுள்ள ஆர்வத்தையே அவர்களின் யுத்த நிறுத்தம் எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நான் வன்னியில் சந்தித்தபோது, அவரின்சமாதானத்திலுள்ள ஆர்வத்தை அறிந்து கொண்டேன்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் இடம்பெற்ற சந்திப்பு போல் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்குமா என்பது தெரியாது. ஆனால் புலிகளின் தலைவரை சந்திக்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் குறித்து நான் மிக மகிழ்ச்சியடைகிறேனென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்க் கட்சிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமைக்குரிய காரணம் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதேயென்று எரிக்சோல் வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

தியிருந்தனர்?

கடந்த வருடம் ஆனையிறவு படைத்தளத்தில் படையினருக்கு படுதோல்வி ஏற்பட்டதுடன், வன்னிப்பகுதியில் 1997ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கை இராணுவதினருக்கு ஏற்படுத்திய தோல்வி பாரியதாக்கத்தை படையினர் மத்தியில் ஏற்படுத்தியதென்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அரசுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சிக்கு, மற்றும் விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணம் பகுதியைக் கைப்பற்ற எடுத்த நடவடிக்கைகளை அரசு தடுத்தி நிறுத்தியிருக்கமுடியும். ஆனால் அவ்வாறு செய்யமுடியாமைக்குரிய காரணம் ஆயுதங்களை வாங்குவதில் அவர்கள் சரியான முடிவை எடுக்காமையேயென்று பாதுகாப்பு அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மிக் -27ரகவிமானம்மற்றும் கிபிர் விமானங்கள் பல்குழல் எறிகணைச் செலுத்திகள் என்பவற்றை அரசு முன்னரே வாங்கியிருந்தால் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளையும் கட்டும்படுத்தி அவர்களை போரில் பலவீனமடையச் செய்திருக்கலாமென்றும் அவ்வதிகாரிகள் அரசுக்குக் கூறியுள்ளனர்.

(இ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மார்ச் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.